2013 ஏப்ரல் 1]

கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெற்று உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

109—

உரக் கலவை ஆலை

***6385—திரு. இரா. துரைக்கண்ணு:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாமணி உரக்கலவை ஆலையை நவீனப்படுத்தி வேலைவாய்ப்பை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பாமணி உர ஆலையின் தற்போதைய கட்டுமான அமைப்பு, ஆலையை நவீனமயமாக்குவதற்கு ஏற்றவகையில் இல்லை. மேலும், புதிய கட்டடங்கள் கட்டி ஆலையை நவீனமயமாக்க போதுமான நிதி வசதியும் இல்லை. இருப்பினும், எடையிடுதல், சிப்பமிடுதல் மற்றும் நகர்வு செய்தல் ஆகிய பணிகள் ரூ.32 இலட்சம் செலவில் இயந்திரமயமாக்கப்பட்டு 24–7–2012 முதல் செயல்பட்டு வருகிறது. இதனால் உற்பத்தித் திறன் நாள் ஒன்றுக்குக் கூடுதலாக 40 மெட்ரிக் டன் அதிகரிக்கும் நிலையில் 18 பணியாளர்கள் நேரடியாகவும், 20 பணியாளர்கள் மறைமுகமாகவும், ஆக மொத்தம் 38 பணியாளர்கள் கூடுதலாக வேலைவாய்ப்பைப் பெறுவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.*

திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்கள், தமிழக விவசாய மக்கள் மட்டுமல்லாமல், இன்றைக்கு எங்கெங்கெல்லாம் மக்கள் வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறார்களோ, அங்கெல்லாம் வறுமையைப்போக்கி, தாயாக, தமிழகத்தின் தெய்வமாக இருந்துவருகின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், கூட்டுறவுத் துறை இன்றைக்குச் சிறப்பாக விளங்கிக்கொண்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு பாமணி உரக் கலவை ஆலையை நவீனப்படுத்தி வேலைவாய்ப்பை அதிகரிக்கச் செய்தால், அங்கே இருக்கின்ற பொதுமக்கள், விவசாயிகள் வேலைவாய்ப்பைப் பெற்று, அவர்கள் வாழ்வில் உயர்வதோடு மட்டுமல்லாமல், விவசாயத்திற்குத் தேவைப்படுகின்ற உரமும் அதிகம் கிடைக்கும். ஆகவே, இன்றைக்குப் புதுப்புது திட்டங்களையெல்லாம் அறிவித்து செயல்படுத்துகிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த ஆலைப் பணியையும் உடன் செய்து முடித்திட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே புதிதாகக் கட்டடங்களை எழுப்பி, மேலும் பலருக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக பதவியேற்ற பிறகு, முதன்முதலாக இந்த அவையிலே நிதிநிலை அறிக்கையிலே ஓர் அறிவிப்பைச் செய்தார்கள். இந்த பாமணி ஆலைக்கு எடையிடுதல், சிப்பமிடுதல், நகர்வு செய்தல் ஆகிய பணிகளைச் செய்வதற்குப் போதுமான ஆட்கள் கிடைப்பதில்லை. அங்கே விவசாயக் காலங்களில் சரியான முறையில் இந்த உரத் தொழிற்சாலை முழுமையாக இயங்குவதற்கு ஆட்கள் கிடைப்பதில்லை. மேலும், விவசாயிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 30,000 மெட்ரிக் டன் அளவிற்கு பாமணி உரம் தேவைப்படுகிறது. நம்முடைய டெல்டா பகுதி விவசாயிகள் நெற்பயிருக்கு அடியுரமாக இந்த உரத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

2013 ஏப்ரல் 1]

எனவே, இந்த உரத்தைப் பயன்படுத்துகிற காலச் சூழ்நிலையில், உர ஆலையில் பணியாளர்கள் பற்றாக்குறை ஏற்படுகிற காலச் சூழ்நிலையைக் கருதி, முதன்முதலாக ரூ.32 இலட்சம் செலவிலே நவீன எடையிடுதல், சிப்பமிடுதல், நகர்வு செய்தல் ஆகிய பணிகளுக்காக இந்த புதிய மெஷின்களைக் கொண்டுவந்து நிறுவினார்கள். மேலும் இப்பொழுது இந்த ஆலையின்மூலமாக ஏறத்தாழ 140 பேர் பணியாற்றுகிறார்கள். தற்பொழுது 2 ஷிப்ட்கள் மூலமாக நாளொன்றுக்கு 80 மெட்ரிக் டன் உரம் உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போது இந்த அதிநவீன எடையிடுதல் மெஷின் நிறுவப்பட்டதன் காரணமாக, மேற்கொண்டு 38 பேருக்குப் பணி கிடைத்ததனால் 178 பேருக்கு பணி வாய்ப்பு கிடைத்திருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதைப்போல, இந்த ஆலையை மேலும் நவீனமயமாக்குவதற்கு, இணையத்தில் பணம் இல்லை. இப்பணியைச் செய்து முடிப்பதற்கு ரூ.4 கோடி தேவைப்படுகிறது. அங்கு இருக்கிற கட்டுமானத்தை முழுமையாக உடைத்துவிட்டு புதிதாகக் கட்ட வேண்டும். எனவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைத் தற்போது பரிசீலிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.

திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விரிவான விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப்பாதங்களை வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குத் தேவையான அளவிற்கு, முடிந்த அளவிற்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாமணி உரத் தொழிற்சாலையில் கடந்த சில ஆண்டுகளாக அதன் முழு உற்பத்தித் திறன் எட்டப்படவில்லை என்று தெரிகிறது. சென்ற

வருடம் automatic bagging system ஒன்று அமைக்கப்பட்டு, அது வெறும் 10 நாட்களே செயல்பட்டதாகத் தெரிகிறது. உற்பத்தித் திறன் குறைவதற்கு மிக முக்கியமான காரணம், பொதுவாக தொழிற்பிரிவில் நிரந்தரப் பணியாளர்கள் இல்லாமல் இருப்பதுதான் என்றும் தெரிகிறது. எனவே, புதிய உற்பத்தி இயந்திரங்களை நிறுவி, அனைத்துப் பணியாளர்களையும் நிரந்தரப் பணியாளர்களாக மாற்றியமைத்து, பாமணி உரத் தொழிற்சாலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேம்படுத்துவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். அவரது கேள்வியிலேயே அதன் பதிலும் இருக்கிறது. விவசாயக் காலங்களில் வழக்கமாக இங்கு வேலைக்கு வருகிற பணியாளர்கள் வருவதில்லை. அவர்கள் விவசாய வேலைக்குச் சென்றுவிடுகிறார்கள். அதனால் உற்பத்தித் திறன் குறைந்துவிடுகிறது. விவசாயக் காலங்களில் வேலைக்கு ஆட்கள் இல்லாததால், இப்போது பணியாளர்கள் எடுக்கப்படுகிறார்கள்.

இரண்டாவது, நிரந்தரப் பணி என்பது இந்தமாதிரிப் பணிகளுக்குப் பொருந்தாது. ஏறக்குறைய 190 பேர்களில் 178 பேர் பணியாற்றுகிறார்கள். அதுபோக, அந்த ஆலையை நவீனமயமாக்குவது என்பது தற்போது இயலாத காரியம். 4 கோடி ரூபாய் செலவாகும். தற்போது இணையத்தில் பணம் இல்லை. இதில் 17:17 என்ற கலப்பு உரம் தயாரிக்கப்படுகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்டா விவசாயிகளுக்குப் போக, மீதி உரம் தமிழகமெங்கும் தேவைப்பட்டால்கூட, அதனைக் கொண்டு செல்வதற்கு போக்குவரத்துச் செலவு அதிகமாகிறது. இதனால், இப்பொழுது தருமபுரி, கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளில் இதேபோன்ற ஆலைகளை நிறுவுவதற்கு இணையத்தின் மூலமாக ஆய்வு செய்யப்படுகிறது.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிற கூடுதல்

2013 ஏப்ரல் 1]

தகவல் என்னவென்றால், அதிகமாக உரம் உற்பத்தி செய்தால், ஆறு மாதங்களுக்குப் பிறகு அந்த உரத்தினைப் பயன்படுத்த முடியாது; அது கெட்டியாகிவிடும். விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியாது. எனவே, விவசாயக் காலங்களுக்குத் தேவையான அளவு மட்டுமே இந்த ஆலையில் உற்பத்தி செய்ய முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூடுதல் தகவலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

110—

புதிய பாலம்

*__7021__—__திரு. பி.எல். சுந்தரம்:__

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலம் வனக் கோட்டம், நகலூர் செட்டில்மென்ட் கிராமத்திற்கு வனத் துறையின்மூலம் புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலம் வனக் கோட்டம், நகலூர் செட்டில்மென்ட் கிராமத்திற்கு இந்த நிதியாண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று வனத் துறையின்மூலம் பாலம் அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.*

திரு. பி.எல். சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வனத் துறை செட்டில்மென்ட் பகுதியில் உடனடியாகப் பாலம் அமைக்கப்படும் என்று சொன்னதற்கு மிக்க மகிழ்ச்சியோடு நன்றியைத்*